முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் விசுவாமித்திரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.06.2019, புதன்கிழமை

1. **யோகசித்தே அரங்கா போற்றி**
**யோகிகளை வணங்க வகை செய்து**
**யுகமாற்றம் செய்ய வந்தநல்**
**உயர் ஞானியே உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
குறையிலா **விகாரி விடை திங்கள்**
**தெரியவே இருபான் நவதிகதி புந்தி வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2019, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு விசுவாமித்திரர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உலகமெங்கும் அரங்கன் காட்டும்
ஞானவழிகளை ஏற்று மக்கள் வர
நன்மை தரும் சூழல் மிகுதி ஆகும்
4. ஆகவே எங்கும் மக்களிடை
அமைதியும் மன பக்குவமும்
மிகைபட தயை சிந்தையும்
மேல் நோக்கும் எண்ணங்களும் வளரும்
5. வளரவே மக்களை நோக்கி
வருக வருக என அழைத்து
தளராத மனோபலம் தருமபலம்
தயை சிந்தை பெருகும்படி அருளி
6. அருளி ஆசி தீட்சை தந்து
அறம் வழி வாரீர் வாரீர் என
அருளும் அரங்கன் சபைக்கு
ஆறுமுகனார் பிரணவ குடிலுக்கு
7. குடிலுக்கு உலகோர் வருகவே
குறைவின்றி எல்லா வளமும்
தேடிட சர்வபலமும் பெற்று
தேசிகனார் அருளால் தேறுவர்
8. தேறவே அரங்கன் காட்டும்
திருவருள் ஞான வழிகளே
மாறுதலை செய்ய வல்ல
மார்க்கமாக இருந்து வருக
9. வருகவே அரங்க ஞானியின்
வழிகாட்டல் ஏற்று உலகில்
முருகா என முழங்கி வருகின்ற
மொழிகுவேன் அரங்கன் சீடர்களை

10. சீடர்களை ஆதரித்து உலகோர்
செப்பிட வழிமொழிந்து வர
தடைகளின்றி பொருளுதவி
தக்க தொண்டுகளும் செய்து

11. செய்து சீடர்களாகி வருக
சேவை தொடர பெருமாற்றமாக
மெய்ஞான உலகமாக மாறும்
மொழிந்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லாது யோகங்கள் செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி, யோகிகளை மக்களெல்லாம் வணங்கி ஆசி பெற்றிட, வழிவகை செய்து இவ்வுலகினில் யுகமாற்றத்தை செய்திட வந்திட்ட யுகமாற்ற அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2019, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே விசுவாமித்திரர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் விசுவாமித்திரர்.

உலகினில் உள்ள மக்களெல்லாம் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் உண்மை ஞானநெறிகளை ஏற்றுக் கொண்டு மக்கள் கடைப்பிடித்து வர, உலகினில் நன்மையே உண்டாகக் கூடிய சூழ்நிலைகளை உண்டாக்கும். உலகமெங்கும் மக்களிடையே அமைதியும் மனப்பக்குவமும் தயைசிந்தையும் அதிகமாகி மேன்மையான எண்ணங்களும் வளர்ந்து ஓங்கும்.

இவ்விதமே உலகினில் நன்மைகள் எல்லாம் விரைந்து நடந்திட, உலக மக்களை நோக்கி அழைப்பு விடுக்கின்ற உயர் ஞானி உலக மக்கள் ஞானம் பெற வாருங்கள் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருக வருக என தாயன்போடு அழைத்து அவர்களுக்கு தளராத மனோபலத்தினையும் தருமபலத்தையும் தந்து தயைசிந்தை பெருகும்படி, அவர்களுக்கு அருள் செய்து அவர்களுக்கு தீட்சை உபதேசங்களை அருளி ஆசிகளை அருளி அறத்தின் வழியிலே மக்கள் விரைந்து வாரீர் வாரீர் என அருள் செய்து அழைக்கும் அரங்கப்பெருமானின் அருள் ஞானசபைக்கு முருகப்பெருமானின் ஓங்காரக்குடிலிற்கு உலக மக்கள் வந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளைப் பெற்று குறைவின்றி எல்லா வளமும் சர்வபலமும் பெற்று தேசிகனாரின் அருட்கருணையால் ஜென்மத்தைக் கடைத்தேற்றுவார்கள்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற இறையருள் மிக்க தூய ஞான வழிகளே உலகினில் மாற்றங்களை செய்கின்ற வல்லமைமிக்க சக்தியுடைய உயர் ஞான மார்க்கமாகும். ஆதலினாலே உலக மக்களே சர்வசக்திமிக்க ஆறுமுக அரங்கரின் தூயநெறி மார்க்கங்களை ஏற்றுக் கொண்டு பின்பற்றுங்கள்.

அரங்கரின் கட்டளைகளை ஏற்று முருகா, முருகா, முருகா என ஜெபங்களுடன் முழங்கிக் கொண்டு வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களை உலக மக்கள் ஆதரித்து வழிமொழிந்து ஏற்றுக் கொண்டு அரங்கன் மேற்கொள்ளும் தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து அரங்கரைச் சார்ந்து உலகோரும் தொண்டுகளைச் செய்து அரங்கரின் சீடர்களாக ஆகிட வேண்டும். இவ்விதமே தொடர்ந்து செயல்பட செயல்பட உலகினில் பெரும் மாற்றங்கள் உருவாகி உலகமே மெய்ஞான உலகமாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் விசுவாமித்திரர்.

–சுபம்–